# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 23.10.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ்வுடைய ஒரு பண்பு **வலி** என்பதாகும். அகராதியில் **வலி** என் சொல்லின் கீழ் எழுதுகிறார்கள். **உதவி செய்பவன்** என்று பொருள் தந்துள்ளனர். இன்னும் சிலரின் கருத்தின்படி, **எல்லா உலகங்களின் அனைத்து காரியங்களையும் சரியாக செய்து முடிக்கக் கூடியவன்; முழு உலகத்தையும் தனது உதவியால் நிலைநிறுத்துபவன்** என்றும் கூறுகின்றனர். அவனது **அல்வாலி** என்ற பண்பிற்கு இன்னொரு பொருள், **எல்லாப் பொருள்களின் உரிமையாளனும், எல்லாவற்றின் மீதும் கவனமுள்ளவனும் ஆவான்.** இப்னு கஸீர் கருத்தின்படி **முயற்சி, ஆற்றல், செயல்** இவற்றுடன் இந்த **வலி** என்ற பண்பின் தொடர்பு உள்ளது. மேற்கண்ட விஷயங்களில் அவனது பண்பு கலக்கவில்லை எனில் அவனை **வலி** என்று கூற இயலாது.

லிஸானுல் அரபி(அகராதி)யில் இவ்வாறு வருகிறது: **அல் வலியு** என்றால் **நண்பன், உதவி செய்பவன்** என்றும், இப்னு அரபி பொருளின்படி **ஒருவரை பின்தொடர்பவன்** (என்றும் கூறப்படுகிறது).

**அல்லாஹ் சூரா பக்கராவின் 258 -வது வசனத்தில் கூறுகிறான்:**

**அல்லாஹு வலிய்யுல்லதீன ஆமனூ** (அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களுக்கு நண்பனாவான்). இந்த வசனத்தில் அல்லாஹ் மூஃமின்களுக்கு அவர்களது விருப்பம், வழிகாட்டல் ஆகியவற்றில் உதவி செய்கிறான் என்ற பொருளில் வருகிறது. ஏனெனில் அவனே ஒருவரின் ஈமானுக்கேற்ப அவரை வளரச் செய்கிறான்.

**அல்லாஹ் கூறுகிறான்:**

**வல்லஸீனஹ்[த்]த ஸாதஹும் ஹுதவ் வஆ[த்]தாஹும் தக்வாஹும்** – நேர்வழியினைப் பின்பற்றுபவர்களை அவன் அந்த நேர்வழியில் மேன்மேலும் முன்னேறச் செய்கின்றான். (47:18)

சூரா பக்கராவின் 258 –வது வசனத்தின் சிறு பகுதியை கூறினேன். முழு வசனம் இவ்வாறாகும்.

அதன் பொருள் : அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களுக்கு நண்பனாவான். அவன் அவர்களை இருள்களிலிருந்து வெளியேற்றி ஒளியிடத்து கொண்டு செல்கிறான். நிராகரிப்பவர்களின் நண்பவர்கள், நன்மையைச் செய்யவிடாது தடுப்பவர்களாவர். இவர்கள் அவர்களை ஒளியிலிருந்து வெளியேற்றி இருள்களிடத்துக் கொண்டு செல்வார்கள். அவர்கள் நெருப்பிற்குரியவர்கள். அவர்கள் அதிலேயே நெடுங்காலம் இருப்பார்கள். (2:258)

அல்லாஹ் கூறுவதே உணமையாகும். அவன் மூஃமின்களுக்கு நண்பனாகி விடுகிறான். அதாவது, உலகக் கலப்பற்ற ஈமானைப் பெற்ற பிறகு அந்த மூஃமின்கள் அல்லாஹ்வின் ஒளியைத் தேடி மென்மேலும் வளர்ச்சி பெறுவதற்காக பாதத்தை முன்வைத்தவாறு முன்னேறிக் கொண்டே செல்கின்றனர். பிறகு அல்லாஹ் அவர்களுக்கு வெற்றியை வழங்குகிறான். அல்லாஹ் இருளிலிருந்து ஒளியின் பக்கம் வெளியேற்றுகிறான் என்பதன் பொருள் ஆன்மீக பலவீனம், பௌதீக பலவீனத்திலிருந்து ஆன்மீகமாகவும், பௌதீகமாகவும் பலமான வளர்ச்சியை நோக்கி எடுத்துச் செல்கிறான். எனவே அல்லாஹ் அறிவிக்கின்றான். எவர் ஈமான் கொண்டரோ அவருக்கு தனிப்பட்ட முறையிலும், ஜமாஅத் அளவிலும் ஆன்மீக, பௌதீக வெற்றிகளை வழங்குவான். அவர்களை துன்பங்கள், பிரச்சனைகளிலிருந்து விடுவிப்பான். நிபந்தனை என்னவென்றால், அவர் ஈமான் கொண்ட பிறகு அதில் முன்னேற வேண்டும். இந்த வெற்றி, அல்லாஹ்வின் கட்டளைகளை படித்து, அதன்படி நடந்தால் கிடைக்கிறது. ஒருவர் அதனை செய்யும் போது அல்லாஹ் அவரது **வலி** ஆகி விடுகிறான். எந்த எதிரியும், ஆட்சியும் அவர்களை அழித்துவிட முடியாது. ஆனால் ஒரு விஷயம் தெளிவானது.

மூஃமின்களுக்கு துன்பங்கள் வரவே செய்கின்றன. உயிர், பொருள் சந்ததிகளின் நஷ்டத்தை சகிக்க வேண்டியது வருகிறது. இவையனைத்திற்குப் பிறகு பௌதீக துன்பத்திலிருந்தும் அவன் மூஃமின்களை வெளியேற்றுகிறான் என்றால் அதற்கு என்ன பொருள்?

இருளிலிருந்து ஒளியின் பக்கம் வெளியேற்றுகிறான். முன்னேற்றத்தின் பக்கம் அடியெடுத்து வைக்கின்றான் என்று பொருள் கொடுக்கலாம். மூஃமின்களை இருளிலிருந்து ஒளியின்பக்கம் கொண்டு வருகிறான். இறுதியில் அவனது வாக்குறுதிக்கேற்ப நற்கூலி வழங்குகிறான் என்று கூறலாம். ஆனால் நினைவில் கொள்ள வேண்டும். ஒரு மூஃமின் இறைவன் மீது உறுதியான ஈமான் கொள்கிறார் எனில் தனது சுயநலம், சொந்த கஷ்டங்கள் மட்டும் அவரது கண்ணுக்கு தெரிவதில்லை. மாறாக ஜமாஅத்தின் வாழ்வைப் பார்க்கிறார்.

நிச்சயமாக ஒரு மூஃமினுக்கு சொந்தமாக கஷ்டங்கள், பொருளாதார ரீதியாகவும் உடல் ரீதியாகவும், உலகியல் ரீதியாகவும் வருகின்றன. நஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியது வருகிறது. ஆனால் இந்த தனிப்பட்ட துன்பங்களைக் கூட மார்க்கத்திற்காக அவர்கள் சகித்துக் கொள்ளும் போது அது ஜமாஅத்தின் வளர்ச்சிக்கு காரணமாகி விடுகிறது.

இஸ்லாம் ஆரம்ப காலத்தில் மக்காவில் சுதந்திரமாக தப்லீக் செய்ய முடிந்ததில்லை. அப்போது முஸ்லிம்கள் மிகவும் அநீதிகளைச் சகித்துக் கொண்டு வாழ்வைக் கழித்தனர். அப்போது முஸ்லிம்கள் செய்த தியாகங்கள் வீணாகிப் போனதா? முஸ்லிம்கள் அநீதிக்கு இலக்கானதெல்லாம் பயனற்றுப் போய்விட்டதா என்ன? இல்லை. ஒருபோதும் இல்லை. முஸ்லிம்கள் சந்தித்த ஒவ்வொரு தியாகமும் அவர்களது ஈமானை உறுதியாக்கியது. அத்துடன் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கும் அது காரணமாக அமைந்து கொண்டே சென்றது. தப்லீகிலிருந்து தடுக்கப்பட்டனர். மக்கள் முஸ்லிமாக மாறுவதிலிருந்து தடுக்கப்பட்டனர். இத்தனைக்கும் மேல் முன்னேறிக்கொண்டே தான் சென்றனர். பிறகு இந்த அநீதியின் காரணத்தால் ஹிஜ்ரத் செய்ய வேண்டியது வந்தது. ஹிஜ்ரத்தின் காரணத்தால் இன்னும் பெரிய முன்னேற்றத்தின் வாசல் திறந்தது. எண்ணிக்கை அடிப்படையிலும், பொருளாதார அடிப்படையிலும் முஸ்லிம்கள் வளர்ச்சி அடைந்து கொண்டே சென்றனர். பிறகு ஒரு காலம் வந்தது. அநீதியிழைத்த மக்கத்து காஃபிர்கள் மூஃமின்களின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டனர். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றைப் பாருங்கள். ஒவ்வொரு சோதனையும் ஜமாஅத்தின் வளர்ச்சிக்கும் ஆன்மீக முன்னேற்றத்திற்கும் காரணமாகவே அமைந்தது. அதே வேளையில் பொருளாதார முன்னேற்றதிற்கும் கூட அச்சோதனைகள் காரணமாக அமைந்தன. அந்த சூழ்நிலை உருவாகாவிட்டால் ஜமாஅத்தில் ஒரு பகுதியினர் அந்நாட்டை விட்டு விலகி முழு உலகிலும் பரவியிருக்கமாட்டார்கள். சின்னச்சின்ன வியாபாரிகளாகவும், சாதாரண வேலை செய்து வருபவர்களாகவும் இருந்த சிலர் குழந்தைகளுக்கு நல்ல கல்வியைத் தர இயலாத நிலையில் கூட இருந்தனர். சிலரிடம் வசதிவாய்ப்பு இருந்தும் கல்வி கற்றுக் கொடுக்கும் சூழ்நிலை இல்லை. ஐரோப்பாவிற்கு வந்து பலர் M.Sc., B.Sc. படிக்கின்றனர். சிலர் மருத்துவக்கல்வி படிக்கின்றனர். சிலர் Ph.D. செய்கின்றனர்.

பாகிஸ்தானில் அவர்கள் வாழ்ந்திருந்தால் இவ்வளவு கல்வி அவர்களால் கற்றிருக்க இயலாது. அதற்கு வாய்ப்புகள் அல்லது சூழ்நிலை இருந்ததில்லை. எனவே இந்த விஷயங்களையும் ஓர் அஹ்மதி மனதில் கொள்ள வேண்டும். ஒரு பக்கம் அவர்கள் தமது ஈமானுக்காக தமது சொந்த நாட்டை விட்டு வெளியேற வேண்டி வந்தது. அதே வேளையில் இறைவன் அதைவிட சிறந்த நிலையை வழங்கினான். பொருளாதார நிலையிலும் அவர்களின் தகுதி மாறி விட்டது. குழந்தைகளுக்கு நல்ல கல்வி கற்பிக்கும் சூழல் உருவானது. எண்ணிக்கை அடிப்படையிலும் சரி, பொருளாதார ரீதியிலும் சரி ஜமாஅத்துமே கணிசமான வளர்ச்சியைப் பெற்றது. இதே போன்று தனிப்பட்ட முறையில் கல்வி வளர்ச்சியிலும் ஜமாஅத்தின் தகுதி உயர்ந்தது. உயர் கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை ஜமாஅத்தில் அதிகமானது. இதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே ஈமானில் முன்னேற்றத்தைப் பெற இவை காரணமாக வேண்டும். அதுவன்றி கர்வம், பெருமை வந்துவிடக் கூடாது. அல்லாஹ், தான் **வலி** ஆக இருப்பதாக கூறுகின்றான். நாமும் உண்மையான அடியானின் முன்மாதிரியைக் காட்ட வேண்டும். பிறகு நமக்கு மேலும் அவன் ஒளியைக் காட்டுவதற்கு காரணமாகி விடுவோம். பாகிஸ்தானை விட்டு வெளியேறியவர்களுக்கு மட்டும்தான் இவையெல்லாம்

கிடைத்தன என்பதல்ல. 1974 -ல் நடந்த சம்பவத்திற்குப் பிறகு பாகிஸ்தானில் வாழ்ந்து வரும் அஹ்மதிகளுக்கும் அல்லாஹ் கருணை காட்டவே செய்தான்.

தொழில்களை அழிக்க முயற்சி செய்யப்பட்டது. அவர்களின் தொழில்கள் முன்னேற்றம் பெற்றன. நாம் **வலி** என்ற சொல்லின் பொருளைப் பார்த்தோம். அதன்படி அவன் நண்பனாகவும், உதவியாளனாகவும் மாறினான். அஹ்மதிய்யத்திற்காக தியாகம் செய்தவர்கள் அல்லது அவர்களின் சந்ததிகளுக்கு அல்லாஹ் உண்மையான நண்பனாகவும், உதவியாளனாகவும் ஆகி வளர்ச்சிகளை வழங்கினான். 1984-ல் ஜமாஅத்திற்கு பெரும் நெருக்கடி கொடுக்கப்பட்டது. காலத்தின் கலீஃபாவே அங்கிருந்து ஹிஜ்ரத் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பிறகு யார் உதவிக்கு வந்தார்? அந்த **வலி** ஆகவும், எல்லாவற்றிற்கும் உரிமையாளனுமாகியவனே ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் ஹிஜ்ரத்தின் போது உதவி செய்தான். அந்த வேளையில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுக்கு அவன் செய்த உதவி உலகில் எந்த நண்பனும் செய்ய இயலாத உதவியாகும்.

பிறகு இது ஜமாஅத் அன்பர்களின் ஈமான் வளர்ச்சியடைய காரணமாக அமைந்தது. ஹிஜ்ரத்தின் விளைவால் ஜமாஅத் எண்ணிக்கை அடிப்படையிலும் வளர்ச்சி பெற்றது.

M.T.A மூலமாக ஆன்மீக வளர்ச்சியையும் தப்லீகிற்கான வாய்ப்பையும் அல்லாஹ் வழங்கினான். ஒரே நேரத்தில் முழு உலகமும் (காலத்தின் இமாமின்) குரலைக் கேட்க வாய்ப்பு ஏற்பட்டது. இதனால் தப்லீகிற்கும் தர்பிய்யத்திற்கும் உறுதுணையாக இருந்தது.

பிறகு இந்த வசனத்தில் ஆன்மீக வளர்ச்சியுடன் பௌதீக முன்னேற்றத்திற்கும் வாக்குறுதி அளிக்கப்பட்டது. அதே வசனத்தில் ஈமான் கொள்ளாதவருக்கு, காஃபிர்களின் நண்பன் **ஷ**ய்த்தானாவான். அவன் காஃபிர்களை ஒளியிலிருந்து இருளின் பக்கம் கொண்டு செல்கிறான் என்று கூறுகிறது. அல்லாஹ் ஒரு விதியை வைத்துள்ளான். அல்லாஹ்வின் சொற்களை மறுப்பவர்கள் **ஷ**ய்த்தானுக்கு நண்பனாகி விடுவர். அவன் அவர்களை இருளை நோக்கி அழைத்துச் சென்று விடுவான். அவனது பின்னால் செல்பவர்கள் ஒளியை ஒருபோதும் காண இயலாது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வாதம் செய்த போது மக்காவாசிகளை நேர்வழியின் பக்கம் அழைத்தார்கள். அப்போது மக்காவின் அறிவுள்ளவர்களுள் சிலர் நற்செயல் செய்பவர்களாகவும் இருந்தனர். ஆனால் அவர்கள் நபியை மறுத்ததன் விளைவாக **ஷ**ய்த்தானின் பிடியில் மாட்டிக்கொண்டு, அவர்கள் செய்துவந்த நற்செயல்களையும் விட்டு விலக்கப்பட்டு அழிவு அவர்களுக்கு விதிக்கப்பட்டது. அபுல் ஹகம் – அறிவின் தந்தை அபுஜஹில் – அறிவீனத்தின் தந்தை என்று மாறினார்.

இன்று வரை அவன் அபுஜஹில் என்று தான் அழைக்கப்படுகிறான். ஏன், கியாம நாள் வரை அவ்வாறே அழைக்கப்படுவான். ஏனெனில் அவனது **வலி** ஆக **ஷ**ய்த்தான் இருந்தான். **ஷ**ய்த்தானால் அவனுக்கு உதவி செய்ய முடிந்ததில்லை. அதே வேளையில் ஒரு அபிஷீனிய அடிமை ஈமானின் ஒளியின் காரணத்தால் அல்லாஹ்வின் **வலி** ஆனார். அல்லாஹ்வின் நட்பின் உதவியின் காரணத்தால் செய்யதுனா பிலால் என்ற பட்டத்தைப் பெற்றார். இதேபோன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய காலத்தில் ஆன்மீக முன்னேற்றம் பெற்றவர்கள் என்றும் உண்மையாளர்கள் என்றும் அழைத்துக் கொண்டிருந்த பலர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை மறுப்பவர்களாக இருந்தனர். பிறகு அவர்கள் இருள்களில் மூழ்கிக் கொண்டே சென்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் மீது அல்லாஹ் அருள் புரிந்தான். அவர்களை ஏற்றுக் கொண்டு ஆன்மீகத்தில் முன்னேற்றம் பெற்றுக் கொண்டே சென்றனர்.

நபியை மறுப்பவர் அவர்களின் மறுப்பின் காரணத்தால் இருளில் மூழ்கி விடுகின்றனர். **ஷ**ய்த்தான் அவர்களிடம் காழ்ப்புணர்ச்சி, பொறாமை, நேர்மையின்மை ஆகியவற்றை நிறைத்து விடுகிறான். பிறகு அவர்கள் மேன்மேலும் இருளில் மூழ்கிக் கொண்டே செல்கின்றனர். பிறகு அவர்களின் தீய முடிவு பற்றி கூறுகின்றனர். அவர்கள் தமது பகைமை என்ற நெருப்பால் இவ்வுலகிலும் எரிக்கப்படுவர். ஜமாஅத்தின்

முன்னேற்றம் இவர்களின் பொறாமையை மேலும் மேலும் தூண்டிக் கொண்டே செல்லும். ஆனால் இவர்களின் பொறாமை, காழ்ப்புணர்ச்சி ஆகியவை அல்லாஹ் யாருக்கு **வலி** ஆகி விட்டானோ அவர்களுக்கு எந்த நஷ்டத்தையும் ஏற்படுத்தாது. நான் சிறிது அகராதிப் பொருள்களின் பக்கம் வருகிறேன்.

சிலர் **வலி** என்பதற்கு மூஃமின்களுக்கு நற்கூலி வழங்குபவன். அவர்களின் நற்செயலுக்கு பிரதிபலன வழங்குபவன் என்றும் பொருள் தருகின்றனர். பிறகு வலியுல்லாஹ் என்றால் அல்லாஹ்வுடைய நண்பன். இதில் அல்லாஹ்வுடைய விருப்பத்துடன் இணைந்து அவனுக்கு பிடிக்காத எந்த செயலையும் செய்யாதவர் என்று பொருள்படும்.

அல்லாஹ்வினால் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்கள் அவனது தொடர்ச்சியான அருள்களின் வெளிப்பாடாக ஆகி விடுகின்றனர். அல் வலிய்யுவல் மவ்லா. இதன் இலக்கண விளக்கங்களை விட்டு விடுகிறேன். அதற்குப் பிறகு எழுதப்பட்டுள்ளது. மூஃமின்கள் வலியுல்லாஹ் (அல்லாஹ்வின் நண்பர்கள்) என்று கூற முடியும். ஆனால் மவ்லா அல்லாஹ் என்று கூற முடியாது. ஆனால் அல்லாஹ்வை மூஃமின்களின் **வலி** ஆகவும் எஜமானனாகவும் இருக்கிறான் என்று கூறுவது முற்றிலும் சரியாகும். மேலும் இதனை விளக்கியவாறு எழுதப்பட்டுள்ளது.

**சூரா முஹம்மது -ல் அல்லாஹ் கூறுகிறான்: ஸாலிக பிஅன்னல்லாஹ மவ்லல்லஸீன ஆமனூ வஅன்னல் காஃபிரீன லாமவ்லா லஹும்** – ஏனெனில், அல்லாஹ் நம்பிக்கை கொள்பவர்களின் பாதுகாவலன் ஆவான். நிராகரிப்பவர்களுக்குப் பாதுகாவலன் எவரும் இல்லை **(47:12).** பிறகு **சூரா அல் அன்ஃபால் -ல் அல்லாஹ் கூறுகிறான்: நிஃமல் மவ்லா வநிஃமன் னஸீர்** – அவன் மிகச் சிறந்த பாதுகாவலனும் மிகச் சிறந்த உதவியாளனும் ஆவான் (8:41)

**பிறகு சூரா அல் ஜுமுஆ -வில் அல்லாஹ் கூறுகிறான்: குல்யா அய்யுஹல்லஸீன ஹாதூ இன்ஸஅம்[த்]தும் அன்ன[க்]கும் அவ்லியாவு லில்லாஹி மின்தூனின்னாஸ்** – நீர் கூறுவீராக. யூதர்களே; மற்றெல்லா மக்களையும்விட நீங்கள்தாம் அல்லாஹ்வின் நண்பர்கள் என்று நீங்கள் உரிமை கொண்டாடுகின்றீர்கள். **(62:7)**

**சூரா அல் அன்ஆம் -ல் அல்லாஹ் கூறுகிறான்: ஸும்ம ருத்தூ இலல்லாஹி மவ்லாஹுமுல் ஹக்** – பின்னர் அவர்களுடைய உண்மையான எஜமானனாகிய அல்லாஹ்விடம் அவர்கள் திரும்பக் கொண்டு செல்லப்படுவர். **(6:63)**

**சூரா அர் ரஅத் -ல் அல்லாஹ் கூறுகிறான்: வமா லஹும் மின் தூனிஹீ மிவ்வால்** – அவனையன்றி அவர்களுக்கு உதவி செய்பவரும் எவருமில்லை. **(13:12)**

பிறகு இலக்கண ரீதியாக விளக்கப்பட்டுள்ளது. அதனை விடுத்து, நான் மேற்கூறிய திருக்குர்ஆனின் வசனங்களை மட்டும் கூறி விளக்குகிறேன்.

முதலில் கூறிய வசனம் சூரா முஹம்மத் –ன் 12வது வசனம். இதனால் நம்பிக்கை கொண்டவர்களுக்கு அல்லாஹ் **வலி** ஆகி விடுகிறான். காஃபிர்களுக்கு நிச்சயமாக ஒரு '**வலி**'யும் இல்லை.

இதற்கு முந்தைய வசனங்களுள் ஒன்றில் அல்லாஹ் கூறுகிறான். **யா அய்யுஹல்லஸீன ஆமனூ இன் தன்ஸுருல்லாஹ யன்ஸுர்[க்]கும் வயுஸப்பித் அக்தாம[க்]கும்** – நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவி செய்தால் அவன் உங்களுக்கு உதவி செய்வான். உங்கள் பாதத்தை உறுதியாக்குவான். **(47:8)**

இந்த வசனம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்திற்குப் பிறகு வரவிருந்த முஸ்லிம்களுக்கு செய்யப்பட்ட போதனையும், எச்சரிக்கையும் ஆகும். நீங்கள் ஈமான் கொண்டால் மட்டும் போதாது. மாறாக, அல்லாஹ் மார்க்கத்திற்கு உதவி செய்வது உங்கள் மீது கடமையாகும். பிறகு இதுவே அல்லாஹ்வின் அருள்களை உங்களுக்கு நெருங்கச் செய்து அல்லாஹ்வின் அருள்களில், உதவிகளில் உங்களை பங்குதாரராக்கி விடும். உங்கள் ஈமானும் உறுதியாகும். நீங்கள் ஒரு ஜமாஅத் என்று அழைக்கப்படுவீர்கள்.

குறிப்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காலத்தில் மார்க்கம் புதுப்பிக்கப்பட இருந்தது. எனவே அல்லாஹ்வுக்கு உதவி செய்பவர்கள் இறை உதவியின் காட்சியை காண்பர் என்று இறைவன் கூறினான். மேலும் ஈமான் கொள்ளாதவர்களுக்கு முந்தைய நபிமார்களை மறுத்தவர்களுக்கு ஏற்பட்ட நிலைதான் ஏற்படும். இன்றும் முஸ்லிம்கள் சிந்திக்க வேண்டிய இடமாகும். நான் பலமுறை கூறி விட்டேன். அல்லாஹ் உதவி செய்வதாக கூறுகிறான். அல்லாஹ், ஒளியின் பக்கம் கொண்டு வருவதாக வாக்களித்துள்ளான். ஆனால், மூஃமின் என்று அழைக்கப்பட்ட நிலையிலும் பத்திரிகைகளில் வரும் செய்திகளைப் பார்க்கும் போது முஸ்லிம்கள் ஒளியிலிருந்து இருள்களின் பக்கம்தான் போய்க் கொண்டிருக்கின்றனர். பௌதீக அடிப்படையிலும் நாம் பலவீனமாகிக் கொண்டிருக்கிறோம். பத்திரிகைகளில் வருகிற கட்டுரையாளர்கள் எழுதுகின்றனர். நம்மிடம் (முஸ்லிம்களிடம்) இல்லாத தீமை என்ன இருக்கிறது? மூஃமின்களுக்கு எஜமானனாகிய இறைவனை கோபம் கொள்ள வைக்கும் செயல்கள் நம்மிடையே ஏதோ சில காணப்படுகின்றன.

எனவே நாம நமக்குள் ஒளியை உருவாக்க வேண்டும். அல்லாஹ் தீனுக்கு உதவி செய்ய முன்வர வேண்டும். காலத்தின் இமாமை கண்டறியுங்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சலாமை அவர்களிடம் கொண்டு சேருங்கள்.

நுபுவ்வத்தின் வாசல் அடைபட்டு விட்டது; எந்த நபியும் வர முடியாது என்று பிடிவாதம் பிடிப்பது அறிவுடைமையல்ல. இஸ்லாமிய சான்றோரின் கூற்றுகளைக் கூர்ந்து கவனியுங்கள். அவர்கள் என்ன கூறுகிறார்கள்? இக்காலத்தின் பெயர்தாங்கிய உலமாக்களின் பின்னால் செல்லாதீர்கள். சில பழைய இஸ்லாமிய உலமாக்களின் கூற்றுகளை எடுத்து வைக்கிறேன். மார்க்க அறிஞர்கள் பலரது கருத்துகள் நமது படைப்புகளிலேயே அதிகம் காணப்படுகின்றன. அதுமட்டுமின்றி அந்த மார்க்க அறிஞர்களின் கூற்றுகள் அவர்களது நூல்களிலும் காணப்படுகிறது.

**உதாரணமாக, முஹ்யித்தீன் இப்னு அரபி கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் முடிவடைந்த நுபுவ்வத் **ஷரீஅத்**தை உடைய நுபுவ்வத் ஆகும். மாறாக, நுபுவ்வத் என்ற ஸ்தானமே முடிவடைந்து விடவில்லை.

எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் **ஷரீஅ**த்தை கூட்டவோ குறைக்கவோ கூடிய நுபுவ்வத் வரப்போவதில்லை. எனவே அத்தகைய **ஷரீஅ**த் கட்டளையைக் கொண்ட நுபுவ்வத் முடிந்து விட்டது. **லா ரஸூல பஅதி வலா நபிய்ய** – அதாவது எனக்குப் பிறகு எனது **ஷரீஅ**த்திற்கு அப்பாற்பட்ட ஒரு **ஷரீஅ**த்துடன் ஒரு ரஸூலோ நபியோ வரப்போவதில்லை. எனது **ஷரீஅ**த்தைப் பின்பற்றக்கூடிய நபி வரலாம். உலகில் எனக்குப் பிறகு **ஷரீஅ**த்தை எடுத்துக் கொண்டு வந்து அந்த **ஷரீஅ**த்தின் பக்கம் மக்களை அழைக்கக்கூடிய ஒரு ரஸூல் இனி வரப்போவதில்லை. இத்தகைய வகையைச் சார்ந்த நுபுவ்வத் மட்டுமே நிறுத்தப்பட்டுள்ளது. அதுவன்றி நுபுவ்வத்தின் ஸ்தானம் முடிவடையவில்லை. (ஃபுதூஹாத்தே மக்கியா தொகுதி 2, பக்கம் 73)

**பிறகு அன்னாரது இன்னொரு மேற்கோள்:**

முழுமையான முறையில் முற்றிலும் நுபுவ்வத் எடுக்கப்படவில்லை.

இந்த சான்றுகளின் காரணத்தால்தான் நாம் **ஷரீஅ**த்துடைய நுபுவ்வத் மட்டும் தான் நிறுத்தப்பட்டுள்ளது. **லா நபிய்ய பஅதி** – எனக்குப் பிறகு நபியில்லை என்பதன் பொருள் இதுதான் என்று நாம் கூறுகிறோம்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எனக்குப் பிறகு நபியில்லை என்று கூறியதற்கு எனக்குப் பிறகு **ஷரீஅ**த்தை வராத எந்த நபியும் வரமாட்டார் என்றே பொருள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு எந்த நபியும் வரமாட்டார்கள் என்பதற்கு ஓர் உதாரணமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களே கூறினார்கள். இந்த கைஸர் மரணித்தால் வேறு கைஸர் வரமாட்டார். இந்த கிஸ்ரா மரணித்தால் வேறு கிஸ்ரா வரமாட்டார்.

**ஹஸ்ரத் சஃரானி கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் **லா நபிய்ய பஅதி வலா ரஸுலன்** – எனக்குப் பிறகு நபியில்லை; ரஸுலுமில்லை என்று கூறியிருப்பதன் பொருள் லா முஷர்ரிஅ பஅதி என்பதாகும். அதாவது எனக்குப் பிறகு ஷரீஅத்தைக் கொண்டு வருகின்ற எந்த நபியும் இல்லை. (அல் யவாகித்துல் ஜவாஹிர் தொகுதி 2 பக்கம் 42)

**பிறகு முல்லா அலி காரி மவ்லுஆதே கபீர் பக்கம் 258 -ல் எழுதுகிறார்கள்:**

எனது மகன் இப்ராஹீம் உயிரோடு இருந்தால் நபியாக இருந்திருப்பார் என்றும், அதே போன்று உமர் உயிரோடு இருந்திருந்தால் நபியாக இருந்திருப்பார் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருப்பது காத்தமுன்னபிய்யீனுக்கு எதிரானது அல்ல. காத்தமுன்னபிய்யீன் என்பதன் பொருள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஷரீஅத்தை மாற்றக்கூடியவரோ, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சாராத ஒருவரோ நபியாக வரமுடியாது என்பதாகும்.

**ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

**கூலூ இன்னஹு காத்தமுல் அன்பியாயி வலா தகூலூ லா நபிய்ய பஅதஹு** – ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீன் என்று கூறுங்கள். ஆனால் அவர்களுக்குப் பிறகு எந்த நபியும் வரமாட்டார் என்ற கூறாதீர்கள். (துர்ரே மன்சூர் தொகுதி 5 பக்கம் 204)

எனவே இந்த சான்றுகளிலிருந்து இக்கால உலமாக்களினால் உருவாக்கப்பட்டுள்ள தோற்றம் சரியானதன்று என்று தெரிய வருகிறது.

அல்லாஹ்வுடைய வசனங்களை ஆய்வு செய்யுங்கள். மேலும் நான் கூறியுள்ள இந்த சான்றுகள் குறித்தும் ஆய்வு செய்யுங்கள். இதற்குப் பிறகு உங்களுக்கு உண்மை தெள்ளத் தெளிவாகி விடும். மேலும் இன்னொரு விஷயத்தையும் ஆய்வு செய்யுங்கள். அல்லாஹ்வின் மீது பொய் சொல்லி அவனிடமிருந்து இல்ஹாம் வருகிறது என்று கூறுபவருக்கு அல்லாஹ் எவ்வளவு காலக்கெடு வழங்குவான்? அவன் புறமிருந்து வந்ததாக வாதிக்கும் ஒருவரோடு, இறைவன் ஏன் ஒரு பொய்வாதியுடன் நடப்பது போன்று நடக்கமல் அதற்கு மாற்றமாக நடக்கிறான்?

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவன் வந்ததாக வாதிக்கிறார்கள். இறைவனும் அவர்களின் ஒவ்வொரு அடியிலும் அவர்களுக்கு வெற்றியை வழங்குகிறான். அல்லாஹ் **வலி** மற்றும் **மவ்லா** ஆக இருப்பதன் ஒளி பொருந்திய காட்சியை நாம் காண்கிறோம். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் ஒருமுறை கூறினான். அல்லாஹு வலிய்யுக்க வரப்புக்க – அல்லாஹ் உனது முதவல்லி (பொறுப்பாளனும்), உனது ரப்பும் (பரிபாலிப்பவனும்) ஆவான்.

பிறகு 1983 –ல் அன்னாருக்கு ஓர் இல்ஹாம் இறங்கியது: அலா இன்ன அவ்லியா அல்லாஹு லாகவ்புன் அலைஹிம் வலாஹும் யஹ்ஸனூன் – நன்றாக அறிந்து கொள்ளுங்கள். அல்லாஹ் வலியாக இருப்பவர்களுக்கு எந்த பயமும் இல்லை; கவலையும் இல்லை. இது தவிர இக்கருத்துப்பட எண்ணற்ற இல்ஹாம்கள் அன்னாருக்கு இறங்கின.

**பொய்யாக நுபுவ்வத்தை வாதிப்பவரைக் குறித்து இறைவன் கூறுகிறான்:**

**வலவ் தகவ்வல் அலைனா பஅதல் அகாவில் லஅகஸ்னா மின்ஹு பில் யமீன்** – ஒருவர் பொய்யாக (வஹி வருவதாக) நம்மீது இட்டுக்கட்டிக் கூறினால் நாம் அவரை நமது வலது கரத்தால் பிடித்து நாடி நரம்பை துண்டித்து விடுவோம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது இல்ஹாம்களைப் பற்றி அறிவித்த பிறகு 24, 25 ஆண்டுகள் வாழ்ந்தார்கள். வெறுமனே உயிர் வாழ்ந்தது மட்டுமின்றி ஜமாஅத்தின் முன்னேற்றங்களைக்

கண்டார்கள். அதுமட்டுமல்ல பல இல்ஹாம்களை மிகவும் தெள்ளத் தெளிவாக அவர்களுக்கு நிறைவேற்றிக் காட்டினான். அல்லாஹ் அவர்களுக்கு எண்ணற்ற சந்தர்ப்பங்களில் தான் **வலி** ஆக இருப்பதை நிரூபித்தான்.

அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் ஒருமுறை கூறினான்: 'அல்லாஹ் உன்னுடனும் உனது நேசத்திற்குரியவனுடனும் இருக்கிறான்'.

இக்காட்சியை நாம் இன்றும் கண்டு வருகிறோம். இனியும் காண்போம்.

மேலும் அன்னாரிடம் கூறினான். உனது வாதத்தை நான் பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன். உனது தப்லீகை நான் பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன் என்றும் கூறினான்.

இவ்விரண்டும் தனி இல்ஹாம்களாகும். இந்த இல்ஹாம் 1886 -ல் இறங்கியது. அப்போது காதியான் எப்படியிருந்தது? எந்த ஒரு பிரச்சாரத்திற்கும் வசதிவாய்ப்பு இருக்கவில்லை. நடந்து நடந்தே பட்டாலா வரை சென்றால்தான் பெரிய வாகனங்களைப் பிடிக்க முடியும். அல்லது குதிரை வண்டியில் போக வேண்டும். காதியான் சின்னஞ்சிறு ஊர். எந்தவோர் அதிகாரியும் அவ்வூருக்கு வந்ததுமில்லை. அத்தகைய ஓர் ஊரில் இருந்து கொண்டு அன்னார் வாதிதார்கள். அவர்களின் வாதத்தை கேட்ட மக்கள் அப்போது சிரித்திருப்பார்கள். ஆனால் இன்று அவர்களின் வாதம் உலகின் எல்லை வரை எட்டி விட்டது.

இது என்ன பெரிய விஷயம்? நாங்களும் தான் எங்களது T.V. மற்றும் Website மூலம் எமது அஹ்மதிய்யா எதிர்ப்பு அல்லது எமது மார்க்கப் பிரச்சாரத்தை செய்து வருகிறோம் என்று ஆட்சேபனை செய்பவர்கள் கூறுகின்றனர். அதுவும் முழு உலகிலும் பரவத்தான் செய்கிறது என்று அவர்கள் கூறினாலும் T.V. மூலம் விஷயங்கள் பரவுவது பெரிய விஷயமல்ல. ஆனால் இந்த வசதிவாய்ப்புகள் தொடங்கும் முன்பே அல்லாஹ்விடமிருந்து செய்தி பெற்று நான் உனது பிரச்சாரத்தை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன் என்று கூறியதாக அறிவித்துள்ளார்கள். 100 ஆண்டுகளுக்கு முன் இவ்வாறு அறிவிப்பது பெரிய விஷயமாகும். இப்போது கூட சில வருடங்களுக்கு முன் சில மாதங்களுக்கு முன் இறைவன் எனது தப்லீகை உலகின் எல்லை வரை எட்ட வைப்பேன் என்று தமது பணியை துவங்குமுன் ஒருவர் கூறியதாக வாதித்தால் அது பெரிய விஷயமேயாகும். ஒருவர் பகிரங்கமாக, இறைவன் பூமியின் எல்லை வரை எட்ட வைப்பதாக அறிவித்து விட்டு பிரச்சாரம் செய்து பார்க்கட்டும். தொலைக்காட்சியில் பிரச்சாரம் செய்யட்டும். Website மூலம் பிரச்சாரம் செய்து பார்க்கட்டும்.

ஆட்சேபனை செய்வது மிகவும் எளிய காரியம்தான். இன்றைய உலமாக்கள் அதனைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். உட்கார்ந்த இடத்தில் வாய்க்கு வந்ததை ஆட்சேபனை செய்துவிடுகின்றனர். உண்மையில் சகிக்க முடியாத பொறாமை என்ற நெருப்பின் விளைவாகும். இது ஜமாஅத்தின் வளர்ச்சி கண்டு அவர்களின் உள்ளம் ஜீரணிக்க முடியாமல் இருக்கிறது. இந்த பொறாமையின் நெருப்பு மூண்டுதான் ஆக வேண்டும். ஏனெனில் இறைவன் முன்னரே கூறிவிட்டான்.

அவர்கள் ஒளியிலிருந்து இருளை நோக்கி செல்வர் என்று தெளிவாக அறிவித்து விட்டான்.

அல்லாஹ்வினால் அனுப்பப்பட்டவர்களுக்கு எதிராக எதிரிகள் நிற்பார்கள். பிறகு அவர்களிடம் சிறிது அறிவு இருந்தாலும் எதிர்ப்பின் காரணத்தால் அதுவும் அழிந்து போய் விடும். ஒளிக்குப் பதில் இருளில் சுற்றிக் கொண்டிருப்பர். பிறகு அஸ்ஹாபுன்னார் – நரகிற்குரியவர் ஆகி விடுவர். அல்லாஹ் இவர்களுக்கு அறிவைத் தருவானாக. அல்லாஹ் ஒவ்வொரு அடியிலும் தான் தான் எஜமானன் என்று தொடர்ந்து மூஃமின்களுக்கு காட்டி வருகிறான். இறைவன் கடமையை நிறைவேற்றக் கூடியவர்களாக நம்மையும் ஆக்குவானாக. அல்லாஹ்வின் அருளிலிருந்து நிரந்தரமாக பங்கு பெறுவோமாக.

**அன்னல்லாஹ மவ்லாகும் வநிஃமல் மவ்லா வநிஃமன் னஸீர் (8:41)** என்று அல்லாஹ் நமக்கு ஆறுதல் தந்துள்ளான்.

அறிந்து கொள்ளுங்கள். அல்லாஹ்தான் உங்கள் எஜமானன். அவன் எவ்வளவு சிறந்த எஜமானன்! எவ்வளவு சிறந்த உதவியாளன்!

ஜுமுஆவுக்குப் பிறகு நடத்தவிருக்கும் சில ஜனாஸாக்கள் பற்றி அறிவிக்கப் போகிறேன்.

முதலாவது, கொய்டாவைச் சேர்ந்த ஸுல்பிகார் மன்சூர் அஹ்மத் சாஹிப். இவரை சில விஷமிகள் சுட்டுக் கொன்று விட்டனர். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

ஷஹாதத்திற்கு ஒரு மாதம் முன்பு காரில் ரப்வா சென்றார். இவ்வளவு தொகை தர வேண்டும் என்று சிலர் அவரிடம் மிரட்டினர். அது ஒரு பெரிய தொகையாகும். தொடர்ந்து தொடர்பு கொண்டு மிரட்டினர். சில நாட்கள் கழித்து ஒருநாள் அவர்களது சடலம் ஒரு காட்டில் கிடந்து கண்டுபிடிக்கப்பட்டது. அத்தோடு ஒரு செய்தியும் அனுப்பியிருந்தனர். நீங்கள் நிறைய பேரை காதியானி ஆக்குகிறீர்கள். எனவே உங்களை உயிருடன் விட முடியாது என்று அதில் குறிப்பிட்டிருந்தது. மரணிப்பதற்கு முன் சித்திரவதையும் செய்யப்பட்டார். பிறகு துப்பாக்கியால் சுட்டு தலையை, முகத்தை சிதைத்து விட்டனர்.

நல்ல துடிப்பான இளைஞர். அர்ப்பணிப்பு குணம் கொண்டவர். குத்தாமுல் அஹ்மிய்யாவின் நாயிப் காயித் ஆக இருந்தார். சில காலம் முன்பு இவரது சச்சாவும் 2008 ஏப்ரலில் ஷஹீதாக்கப்பட்டார். 2008 ஜுனில் இவரது இன்னொரு உறவினர் ஷஹீதாக்கப்பட்டார். இந்த இளைஞர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு சஹாபியாகிய முன்ஷி அப்துல் கரீம் சாஹிப் பட்டாலவி உடைய பேரர் ஆவார். இவர் வயது முதிர்ந்த ஒரு தாயார், மனைவி, இரு குழந்தைகளில் ஒரு பையன், ஒரு பெண் ஆகியோரை விட்டுச் சென்றுள்ளார். இவர்கள் அனைவருக்கும் அழகிய பொறுமையை அல்லாஹ் வழங்குவானாக. மர்ஹுமின் தகுதியை அல்லாஹ் உயர்த்திக் கொண்டே செல்வானாக.

இரண்டாவது, மிஸ்ரிலுள்ள நமது நண்பர் முஹம்மத் அஸ்வா சாஹிப் 14 அக்டோபர் 2009 அன்று மரணித்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் பழைய நண்பர். முன்னுதாரணமாக விளங்கத்தக்க அஹ்மதியாவார். ஒப்படைக்கப்பட்ட பணியை மிகவும் பொறுப்புடன் நிறைவேற்றுபவர் ஆவார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது பேரன்பு கொண்டவராவார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பெயரைக் கேட்டாலும் உணர்ச்சி வசப்படுபவராவார். 1950-ல் L.L.B. டிகிரி முடித்து விட்டு வக்கீலாக இருந்தார். அவர் ஜமாஅத்தில் பைஅத் செய்த சம்பவம் சுவையானது. ஜமாஅத்தைப் பற்றி தெரிந்து கொள்வதற்காக ஜமாஅத்தின் பெரிய எதிரியாகவும் ஹதீஸில் நன்கு தேர்ச்சி பெற்றவராகவும் விளங்கிய ஓர் ஆலிமிடம் ஜமாஅத்தைப் பற்றி தெரிந்து கொள்வதற்காக சென்றார். ஜமாஅத்தின் கொள்கைகள் பற்றி அவரிடம் விசாரித்தார். அப்போது நஸீருத்தீன் அல்பானி என்ற அந்த ஆலிம் கூறினார். கிறித்தவர்களின் முகத்தை உடைக்க அவர்களின் கொள்கை தான் சிறந்தது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறந்து விட்டார். கிறித்தவர்களிடம் வாதம் செய்தால் அவர்கள் வாயடைத்து விடுவர். அப்போது இந்த அஹ்மதி கேட்டார். உண்மையில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் நிலை என்ன? அதற்கு அந்த ஆலிம் ஈஸா நபி மரணித்து விட்டார் என்றவுடனே இந்த அஹ்மதி கூறினார். நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணையப் போகிறேன். ஏனெனில் கொள்கை என்பது இரட்டைத்தன்மை உடையதாக இருக்க முடியாது என்று கூறி அஹ்மதி ஆகி விட்டார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஷாம் சென்ற போது அவர்களுடன் சேர்ந்து இவர் லெபனான் சென்றார். இந்தப் பயணத்தைப் பற்றி கூறினார். அங்கு பால்பக் என்ற புராதன நகருக்கு சென்றோம். அங்கு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள். இந்நகரில் அல்லாஹ் அல்லாதவற்றின் வணக்கம் நடைபெறுகிறது. இன்று நாம் ஒவ்வொருவரும் இவ்வூரில் இரண்டு இரண்டு ரக்அத்துகள் நஃபில் தொழ வேண்டும். இவ்வூரில் ஒரே இறைவனின் வணக்கம் நம் மூலம் நடக்க வேண்டும் என்று கூறினார்கள். நாங்களும் அவ்வாறே செய்தோம்.

இவர் ஒரு நல்ல வக்கீல் ஆவார். எந்த ஒரு விஷயத்தைக் கூறினாலும் அவர் ஒரு வக்கீலாக இருந்ததால் எதையும் ஆதாரமின்றி ஏற்கமாட்டார். ஆனால் காலத்தின் கலீஃபா இவ்வாறு கூறியுள்ளார்கள் என்று சொன்னால், சரி அதுவே போதும். இதுவே தீர்ப்பு என்று கூறி விடுவார். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் காலத்தில் சில அஹ்மதிகள் மீது வழக்கு போடப்பட்டிருந்தது. அப்போது

அல்லாஹ் அவ்வழக்குகளிலிருந்து விடுவிக்க ஏற்பாடு செய்தான். ஆரம்ப காலத்தில் அவர் வக்கீலின் உடையில் நீதிமன்றத்தில் நின்றிருந்தார். இளைஞராகவும், வக்கீலின் உடையிலும் இருந்த அவரைப் பார்த்து நீதிபதி, இவர் புதிய வக்கீலாகவும், அவர் முன்னர் பார்க்காத நபராகவும் இருந்ததால் நீங்கள் வக்கீலா? என்று கேட்டார். உடனே சற்றும் தயங்காமல் நீங்கள் தான் ஜட்ஜா? என்று இவர் கேட்டார். ஜட்ஜ் அமைதியாகி விட்டார். அஹ்மதிகளுக்காக வாதாட வேண்டிய வக்கீல் அப்போது அங்கு இல்லை. இளைஞராக இருந்ததால் ஜமாஅத்தினர் ஜட்ஜிடம் அப்படியெல்லாம் பேசக்கூடாது என்று அவருக்கு புரிய வைத்தனர். அரபி கற்பதற்காக அந்நாட்டிற்கு செல்லும் நமது முபல்லிக்களுக்கு மிகவும் கருணையுடன் உதவி செய்வார். அவர்களின் மொழி உச்சரிப்பை சரியாக்குவதில் நிறைய உதவி செய்வார். இவருடைய தகுதிகளை அல்லாஹ் உயர்த்துவானாக. இவரின் சந்ததிகளிடமும் அல்லாஹ் அஹ்மதிய்யத்தை நிலைநாட்டுவானாக. M.T.A. -ன் ஊழியராக இருந்த முஹம்மத் பைஸ் ஸவூது சாஹிப், முஹம்மது மலக் சாஹிப் கேம்பிரிட்ஜ் யுனிவர்சிட்டியில் பணியாற்றுகிறார். இருவரும் இவருடன் மகள் வழிப் பேரன்களாவர்.

மூன்றாவது ஜனாஸா, முகர்ரம் சிராஜுல் ஹக் சாஹிப். இவர் நமது முபல்லிக் மற்றும் மூஸி ஆவார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபியின் மகன். சிறந்த நற்குணங்கள் உடையவர். தஹஜ்ஜுத் தொழுபவர். ஏழைகளுக்கு அனுதாபம் காட்டுபவர். அவரது ஜனாஸாவில் ஜமாஅத்திற்கு வெளியில் உள்ள பலர் கலந்து கொண்டனர். இவரது மறைவால் நாங்களும் அனாதையாகி விட்டோம் என்று அவர்கள் கூறினர். M.T.A. மூலமாகவும் கேசட்டுகள் கொடுத்தும் தப்லீக் செய்வார். இவர் மூலம் பல பைஅத்துகள் நடந்துள்ளன.

நான்காவது ஜனாஸா, முஸப்பர் அஹ்மத் சாஹிப். இவர் 9 அக்டோபர் 2009-ல் வஃபாத் ஆனார்கள். அவருக்கு வயது 60. மேற்கு ஆப்பிரிக்கா, ஐவரிகோஸ்ட், புர்கினோஃபாஸோ போன்ற இடங்களிலுள்ள ஜமாஅத்தில் பணியாற்றியவர். நல்ல முயற்சி செய்து உழைப்பவர். சிறு வயதிலிருந்தே இவரை நான் அறிவேன். அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவிலும் குத்தாமுல் அஹ்மதிய்யாவிலும் நாங்கள் ஒன்றாக பணியாற்றி உள்ளோம். மிகவும் கவனத்துடன் பணியாற்றுபவர். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக. இவரது குடும்பத்தாருக்கு பொறுமையை வழங்குவானாக. இவருக்கு ஒரு மனைவி, இரு மகன்கள், இரு மகள்கள் உள்ளனர். அனைவரையும் அல்லாஹ் தனது பாதுகாப்பில் வைப்பானாக! ஆமீன்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 23.10.2009

Translated by : **Muallim M. NIZAMUDDIN**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**